மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ரூ. 933 இலட்சங்கள் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களிடமிருந்து பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. தேவையான வனத்துறை நிலங்களைக் கையகப்படுத்த வனத் துறையின் ஒத்திசைவும் விரிவான திட்ட அறிக்கைக்கு அரசின் ஒப்புதலும் வழங்கியபின் அணை கட்டும் பணி தொடங்கப்படும்.

மின் இணைப்பில் முன்னுரிமை.

***2704 திரு. நா. இராமகிருஷ்ணன் :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவிரி நீர்ப்பாசனத்தை நம்பியுள்ள விவசாயிகளுக்கு காவிரி நீர் வறண்ட காலங்களில் நன்செய் நிலங்களில் ஆழ்துளை கிணறு போட்டவுடன் மின் இணைப்பில் வழங்கும் முன்னுரிமை கம்பம் பகுதி விவசாயிகளுக்கும் வழங்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

9-50 மணி

திரு. நா. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் பெரும்பாலான விவசாயிகள் பெரியார் அணையை நம்பி வாழ்கிறார்கள். மழையே பொழியாத காலங்களில், பெரியார் அணையிலிருந்து தண்ணீர் விவசாயிகளுக்குக் கிடைக்காத காரணத்தினால், வயல்களில் ஆழ்துளை கிணறுகள் போட்டு, அதன் மூலமாக அரிசி உற்பத்தியைப் பெருக்குகின்ற அந்த நிலைக்கு, அரசு பம்ப்-செட் மோட்டாரை வைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; தலைவர் அவர்களே, விவசாயிகள் ஆற்றை நம்பி வாழ்கிறார்களா, அணையை நம்பி வாழ்கிறார்களா; என்பதல்ல இங்கு பிரச்சினை. Compulsory Monopoly Procurement— ஏகபோகக் கொள்முதல் செய்கிற பகுதிகளுக்குத்தான், மின் இணைப்புத் தருவதிலே முன்னுரிமை

தரவேண்டுமென்று அரசு முடிவெடுத்திருக்கிறது. அதன் அடிப்படையிலே கீழைத் தஞ்சை முழுவதும், திருச்சி மாவட்டத்திலே குளித்தலை, முசிறி, திருச்சி, கரூர், லால்குடி மற்றும் உடையார்பாளையம், தென்னாற்காடு மாவட்டத்திலே காட்டுமன்னார் கோயில், சிதம்பரம், புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கி, ஆவுடையார்கோயில் ஆகிய வட்டங்கள் இத்தகைய சலுகையைப் பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, Compulsory Monopoly Procurement எங்கு இருக்கிறதோ, அங்கு இந்த முன்னுரிமை தரப்படும். கமீபத்தில் அத்தகைய Procurement இல்லை. ஆகவே, முன்னுரிமை இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, மின் இணைப்புக் கொடுப்பதிலே, முன்னுரிமையைப் பற்றி எங்கெங்கு அரசு, நெல்லைக் கொள்முதல் செய்கிறதோ, அங்கு மட்டும்தான் என்று சொன்னார்கள். தமிழகத்திலே—இன்று பல பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. தமிழகத்தில்—அரிசி உற்பத்தி குறைந்து கொண்டு வருகிறது என்று. 66 லட்சம் டன் தேவைக்கு, 55 லட்சம் டன்தான் விளைகிறது. 11 லட்சத்தை, ஆந்திராவிலிருந்துதான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆந்திராவிலிருந்து வரவில்லையென்றால், இன்னும் விலை உயர்ந்து ரூ. 20 ஆனாலும் ஆகலாம் ஆகவே, இன்றைக்கு மத்திய சர்க்காரிலே, எல்லோருக்கும் மகிழ்ச்சி தரக்கூடிய, விவசாயிகளுக்கும் சந்தோஷம் தரக்கூடிய, விவசாய கிராமப் பகுதிகளுக்கு, மொத்தத் திட்டத்திலே 49 சதவீதத்தைச் செலவழிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, கிராமத்தை முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்று சொன்னால். விவசாயத்தை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும். விவசாயத்தை முன்னுக்குக் கொண்டு வர வேண்டுமென்று சொன்னால், மின்சாரத்தைக் கொடுக்க வேண்டும். கிணற்றிலேயிருந்து தண்ணீர் எடுப்பதற்கு அதிலே முன்னுரிமை வழங்குவதற்கு, தொழில்களுக்கு எப்படி தொழிற்சாலை கட்டிய உடனே மின்சாரத்தை வழங்குகிறீர்களோ, அதேமாதிரி மின்சாரம் கேட்டவுடனேயே வழங்குவதற்கு இந்த அரசு சால்ஜாப்பு சொல்லாமல் வழங்க அமைச்சா அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, சால்ஜாப்பு அல்ல. (சிரிப்பு) சட்டப்படி இருக்கிற நிலைமையைச் சொல்கிறோம். விவசாயிகளுக்கு — கிணறுகளுக்கு மின் இணைப்பு இல்லையென்று இந்த அரசு சொல்லவில்லை. ஆனால் 100 சதவீதம் லெவி வாங்குகிற இடத்திலேதான் முன்னுரிமை தருகிறோம். அரிசி குறைகிறது என்றால் குறையாமல் விளைந்தது அத்தனையும் கொள்முதல் தருகிற அவர்களுக்கு முன்னுரிமை தருகிறோம், அவ்வளவுதான்.